# வளர் தமிழ் ஆய்வு

யாதும் ஊரே
யாவரும் கேளிர்

பதிப்பாசிரியர்கள்

**சி. மைக்கேல் சரோஜினி பாய்**

**ப. பத்மநாப பிள்ளை**

**வ. இராசரத்தினம்**

வளர் தமிழ் ஆய்வு மன்றம்

திண்டுக்கல்

**2017**

ISBN NO : 978-81-920884-6-4

| | | |
|---|---|---|
| நூற்பெயர் | : | வளர் தமிழ் ஆய்வு<br>(கட்டுரைத் தொகுப்பு) |
| பதிப்பாசிரியர்கள் | : | சி. மைக்கேல் சரோஜினி பா<br>ப. பத்மநாப பிள்ளை<br>வ. இராசரத்தினம் |
| முதற் பதிப்பு | : | மே 2017 |
| தாள் | : | 18.6 மேப் லித்தோ |
| அளவு | : | டெம்மி |
| அச்சுரு | : | அகராதி 10 புள்ளி |
| பக்கம் | : | x+350 |
| விலை | : | ரூபாய் 500/- |
| அச்சகம் | : | சூர்யா பிரிண்ட் சொலூசன்ஸ்<br>சிவகாசி |
| உரிமை | : | பதிப்பாசிரியர்களுக்கு |
| வெளியீடு | : | வளர் தமிழ் ஆய்வு மன்றம்<br>பூங்குன்றன் பள்ளி வளாகம்<br>விவேகானந்தா நகர்<br>திண்டுக்கல் - 624 001<br>தமிழ்நாடு<br>தொ.பே. 0451-2427458 |

| | | |
|---|---|---|
| 51. | ஏ. சுபா<br>சிலப்பதிகாரத்தில் சமுதாயச் சித்திரிப்பு | 242 |
| 52. | ஆ. சுப்பிரமணியன்<br>பாமாவின் மனுசி புதினத்தில் காணலாகும் பெண்களின் பிரச்சினைகள் - ஓர் ஆய்வு | 247 |
| 53. | ச.அ. சுஜா<br>கந்தர்வன் கதைகளின் கருவும் சிறப்பும் | 251 |
| 54. | அ. சுஜாதா ஜாய்ஸ்<br>அள்ளூர் நன்முல்லையார் பாடல்களில் பெண்ணியம் | 255 |
| 55. | ஸ்ரீ. சுஜி எஸ்தர் ராணி<br>தேம்பாவணி - இரட்சணிய யாத்திரீகம் - இயேசுகாவியம் ஓர் ஒப்பீடு | 259 |
| 56. | இரா. சுஜித்திராகிருஷ்ணகுமாரி<br>நற்றிணையில் நிலவியல் | 264 |
| 57. | வே.செடிப்பவுன்<br>மாங்காய்ப்பால் புதினம் முன்னிறுத்தும் இலட்சிய இளைஞர்கள் | 267 |
| 58. | செ. செந்தில்குமார்<br>பாலைத்திணை மக்களின் தொழில்கள் | 272 |
| 59. | இரா. செல்வமீனா<br>பெண்களுக்கான நாட்டுப்புற மருத்துவம் | 277 |
| 60. | செ. செல்வராணி<br>எட்டுத்தொகையில் நிலையாமை கோட்பாடு | 282 |
| 61. | சி. சொர்ணமாலா<br>புறப்பொருள் வெண்பாமாலையில் பெண்கள் | 287 |
| 62. | ஜே. சோபியா பாத்திமா<br>தபூசங்கர் கவிதைகளில் காதல் | 292 |
| | | |

# கந்தர்வன் கதைகளின் கருவும் சிறப்பும்

ஒவ்வொரு காலகட்டத்திலும் இலக்கியத்தின் பாடுபொருள் மாறிக்கொண்டே வருகிறது. அது வாழ்க்கையை ஒட்டியதாக அமைந்தால் மக்களிடையே வரவேற்பைப் பெறுகிறது. நடப்பியல் தன்மையோடு எதார்த்த மாக அமைந்த கதைகள் என்றும் நீடித்து இருக்கும். அப்படிப்பட்ட நீடித்து நிற்கும் சிறுகதைகளைச் சிறந்த முறையில் தருபவர் கந்தர்வன். "என்னுடைய சஹிருதயனாக இருக்கிறீர்கள்" என்று கி.ராஜநாராயணனால் பாராட்டப்பட்டவர்.

கந்தர்வனின் சிறுகதைத் தொகுப்புகள் பலவற்றுள் 'பூவுக்குக் கீழே' என்ற தொகுப்பில் பதினொன்று சிறுகதைகள் உ ள்ளன. அக்கதைகளின் கரு அமைப்பும் கந்தர்வனின் தனிச்சிறப்பும் குறித்து ஆராய்வதே இக்கட்டுரையின் நோக்கம்.

**கரு அமைப்பு**

மனிதர்கள் வாழும் சமுதாயம், சுற்றுப்புறச்சூழல், அரசியல், தான் ஏற்றுக்கொண்ட கொள்கைகள், சமயம் ஆகியவை ஒரு படைப்பாளியின் கதைக்கருவை உருவாக்கும் கதைக்களங்களாகப் பெருந்துணை புரிகின்றன எனலாம். "கரு மிகச்சிறப்பாக அமைந்த சிறுகதைகளே படிப்பவரின் நெஞ்சில் நீங்காமல் நிற்பனவாகும்" என்கிறார் மு.வரதராசன். கந்தர்வனின் சிறுகதை கதைக் கருக்கள் சாதி, வறுமை, பெண்ணுரிமை, வர்க்கவேறுபாடு, அரசியல், பொருளாதாரச்சிக்கல், மூடநம்பிக்கை எதிர்ப்பு முதலியவற்றைப் பற்றி எடுத்துரைக்கின்றன.

**சாதியும் வறுமையும்**

சாதியைச் சமுதாயப் பிரச்சினையாகப் பார்க்க மறுக்கும் மனிதன், அது தன் வாழ்வில் குறுக்கிடும்போது அதைப்பற்றிச் சிந்திக்கத் தொடங்குகிறான். அந்தச் சிந்தனையைத் தூண்டிய பெருமை எழுத் தாளனுக்கு உ ண்டு. 'காடுவரை' என்ற கதை, காதலை மையப்படுத் தினாலும் கதையின் மூலஉ ணர்வு சாதி பற்றியதே. வேறுபட்ட சாதிகளில் பிறந்த இருவர் கலப்புமணம் புரிந்து கொண்டதால் ஏற்படும் விளைவு இக்கதையில் தெளிவாகக் காட்டப்பட்டுள்ளது. "விஜயலட்சுமி இறந்தவுடன் அவளருகிலிருந்த கிருஷ்ணமூர்த்தியின் தாய்(விஜயலட்சுமியின் சாதி), பெஞ்சமின் (விஜயலட்சுமியின் கணவன்)வீட்டார் வந்ததும் (ஆங்கிலோ இந்தியர்) எழுந்து சென்று விடுவாள். இறுதியில் காடுவரை சென்றவர் யாரும் இல்லை. முடிவாக அனைத்துக் காரியங்களும் முடிந்தபின்பு கிருஷ்ணமூர்த்தி வீட்டிற்குப் போய்க்கதவைத் தட்டினான். கிருஷ்ணமூர்த்தி அம்மா

---

**முனைவர் ச.அ. சுஜா**

பாத்திமா கல்லூரி, மதுரை.